கராத்தே வீரர்களை உருவாக்கிய





# பயிற்சி மையத்தை உடைப்பதா?

## மக்கள் கொதிப்பு

● எல்.கே.ராஜ்

கோலாலம்பூர், ஆக.8-

சிகாம்புட், தாமான் ஸ்ரீ சினாரில் கடந்த 30 ஆண்டுகளாகச் செயல்பட்டு வந்த கராத்தே மையத்தின் ஒரு பகுதி நேற்றுக் காலை உடைக்கப்பட்டது. அதேநேரத்தில் இந்த மையம் தொடர்ந்து செயல்படக்கூடாது என்பதை உறுதி செய்யும் வகையில் அதன் மின் இணைப்பும் துண்டிக்கப்பட்டது. சீ விளையாட்டுப் போட்டியில் கராத்தே பிரிவில் தங்கம் வென்ற முன்னாள் விளையாட்டாளர் பி.தென்னவன் தலைமையில் இந்த மையம் செயல்பட்டுவந்தது. கிள்ளான் பள்ளத்தாக்கு மேலும் அதன் சுற்றுவட்டாரங்களைச் சேர்ந்த 200 மாணவர்களைத் தேர்வு

பக்கம் 13

முதல் பக்கத் தொடர்ச்சி

### கராத்தே வீரர்களை...

செய்து அவர் பயிற்சி அளித்து வந்தார்.

இந்த மையத்தை ஒப்படைக்கும்படி அல்லது காலி செய்யும்படி இளைஞர், விளையாட்டுத்துறை அமைச்சு தொடர்ந்து நெருக்குதல் தந்து வந்ததாக தென்னவன் குறிப்பிட்டார். இணைந்து செயல்படுவோம் என்ற பரிந்துரையும் நிராகரிக்கப்பட்டது என்றார் அவர்.

தேசிய அளவிலும் மாநில அளவிலும் நாட்டைப் பிரதிநிதித்த பல சாம்பியன்களை இந்த மையம் உருவாக்கியிருக்கிறது. நேற்றுக்காலை இங்கு வந்த கோலாலம்பூர் மாநகர் மன்றம், நில - கனிம வள அலுவலகம் ஆகியவற்றைச் சேர்ந்த அதிகாரிகள் மையத்தை உடைக்கும் பணியில் இறங்கினர்.

அப்போது அங்கு வந்த டத்தோ டி.மோகன், மஇகா மத்திய செயலவை உறுப்பினர் டி.தர்ம குமாரன், மலேசிய கராத்தே மகா குரு டத்தோ பொன்னையா, பொதுமக்கள் ஆகியோர் இந்த மையத்தை உடைக்க வேண்டாம் என்று அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

அங்கு வந்திருந்த மாணவர்கள் சிலர் தாங்கள் பயிற்சிபெற்று வந்த மையம் உடைபடுவதைக் கண்டு கதறினர். மேலிடத்திலிருந்து வந்த நெருக்கடி காரணமாக தங்களது கடமையைச் செய்வதாக அதிகாரிகள் குறிப்பிட்டனர். இந்த இடத்தைக் காலி செய்வதற்கு ஒரு மாத நோட்டீஸ் வழங்கப்பட்டிருக்கிறது.

இதனிடையே, இவ்விவகாரத்திற்கு ஒரு சுமுகமான தீர்வு காண்பதற்கு வரும் ஆகஸ்டு 21ஆம் தேதி இளைஞர், விளையாட்டுத்துறை அமைச்சிடம் ஒரு மகஜர் வழங்கப்படும் என்று தென்னவன் தெரிவித்தார்.

இதற்கிடையே இந்தப் பயிற்சி மையம் உடைக்கப்பட்ட சம்பவத்திற்குப் பொறுப்பேற்று இளைஞர் -விளையாட்டுத்துறை அமைச்சர் ஹன்னா இயோ பதவி விலக வேண்டும் என்றும் மலேசிய இந்திய விளையாட்டுக் கலாச்சார சங்கத் தலைவர் டத்தோ டி.மோகன் வலியுறுத்தி னார். அமைச்சராக இருக்கும் ஹன்னா இயோதான் சிகாம்புட் நாடாளுமன்ற உறுப்பினரும்கூட.

அவரது தொகுதியில் உள்ள விளையாட்டுப் பயிற்சி மையத்தை அவரால் ஏன் காக்க முடியவில்லை? எனவே இந்த விவகாரத்திற்குப் பொறுப்பேற்று ஹன்னா இயோ பதவி விலக வேண்டும். அதேசமயம் இந்தச் சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இளைஞர் விளையாட்டுத்துறை அமைச்சின் தலைமையகம் முன் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்றும் டி.மோகன் குறிப்பிட்டார்.